கோடிட்ட இடங்களை நிரப்புக:

நம்மை வியக்க வைக்கும் அறிவியல் விந்தைகளில் ________ ஒன்று. இதைப் பல்வகைப் பயன்பாட்டுக்கு உதவும் கருவியாகக் கண்டுபிடிபாளர்கள் அறிமுகப்படுத்தினர். இன்றைய அறிவியல் உலகம்,தகவல் தொடர்புத் ________ மூலம் உன்னதமான பிணைப்பை உலக மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

கண்ணிமைக்கும் நேரத்தில் கடல் கடந்து பறக்கும் குரல் ஒலிகளின் ________ செயல்பாடுகளுக்குச் செல்லிடப்பேசிகள் முக்கியப் பங்களிக்கின்றன. காடு , மேடு எல்லாம் உழைத்துக் களைத்துப் போன ஏழை மக்கள் வாழும் பகுதிகளில் கூடச் சந்தடியில்லாமல் நுழைந்து சாதனை படைத்து,அவர்தம் வாழ்க்கைத் தொடர்பை வலுவாக்கி வருவதும் இத்தகைய செல்லிடப்பேசிகளே!

செல்லிடப்பேசிகளின் பயன்பாட்டினை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

இயற்கையான ________ அறிவியல் கண்டு பிடிப்புகளாகிய செல்லிடப்பேசிகளின் மூலம் வெளியாகும் கதிரியக்க அதிர்வுகள் ________ பலவித விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

செல்லிடப்பேசிகளின் ________ வெளியாகும் பாதுகாப்பற்ற நுண்ணலைக் கதிர்வீச்சுகள் பயனீட்டாளர்களின் மூளையிலும் ஊடுருவிச் செல்வதாகக் கண்டறிந்துள்ளனர். ________ குழந்தைகளையே இக்கதிர்வீச்சுகள் அதிகமாகப் பாதிக்கின்றன. செல்லிடப்பேசிகளின் தீய விளைவுகள் பற்றிப் பல்வேறு நாட்டைச் சேர்ந்த ________ அறிஞர்களின் ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

________ செல்லிடப்பேசி கதிர்வீச்சு செல்லும்போது வெப்பநிலை சுமார் 3*c அதிகரிப்பதால் ________ நோய்கள் எளிதில் ஏற்படுவதை நிரூபித்துள்ளனர்.வாகனங்களைச் செலுத்தும்போது கண்டிப்பாகச் செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| மனிதர்களுக்குப் | ஒலிக் கம்பிகளிலிருந்து | அறிவியல் |
| தொழில்நுட்பங்களின் | கதிர்வீச்சுகளிடையே | கண்புரை |
| செல்லிடப்பேசிகளின் | ஒப்புயர்வற்ற | பெரியவர்களைவிடக் |
| | கண்களுக்கு அருகில் | |

LIVEWORKSHEETS